தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

M.C.O.P. No.2858/2017

மனுதாரர் தரப்பு **1 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேணுகோபால் | வயது | : |
| தந்தை/ கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | ஜாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| மாவட்டம் | : | மொபைல் | : |

சட்டம் 49/1969ன் விதிமுறைகளின்படி **19.08.2024** நாளாகிய இன்று திரு**. P.**நாகராஜன் **M.A., M.L.,** மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

## <u>முதல் விசாரணை:</u>

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள வாசகங்கள் உண்மை என்றும் சரி என்றும் உறுதியளிக்கிறேன். எனது சாட்சியத்தின் அடிப்படையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன். எனது தரப்பில் எனது சான்றாவணமாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வரிசை எண் | ஆவணம் | ஆவண எண் |
|---|---|---|
| 13) | முதல் தகவல் அறிக்கை | **ம.சா.ஆ.1** |
| 14) | வாகன காப்பீட்டு நகல் | **ம.சா.ஆ.2** |
| 15) | டிஸ்சார்ஜ் சம்மரி | **ம.சா.ஆ.3** |
| 16) | CT Scan கிருஷ்ணா மருத்துவமனை | **ம.சா.ஆ.4** |
| 17) | மருத்துவரின் ஆலோசனை குறிப்பு | **ம.சா.ஆ.5** |

## <u>**2**ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த இடம் இரட்டை சாலை என்றால் ஆமாம். விபத்து நடந்த இடம் நான்கு சந்திப்பு ரோடு என்றால் அதற்கு சிறிது முன்பாக. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றேன் என்றால் ஆமாம். வடக்கு நோக்கி திரும்பும்போது விபத்து

என்றால் திரும்புவதற்கு முன்பாகவே நடந்தது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் எனக்கு எதிரே வந்தது என்றால் இல்லை பின்னால் வந்து முட்டியது. எனது இருசக்கர வாகனத்திற்கு வலது பக்கம் சேதாரம் என்றால் ஆமாம். இரண்டு வாகனங்களும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு சென்று உள்ளது என்றும், அதன் ஆய்வறிக்கைகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்து 18.05.2017 என்றும், 02.06.2017 ல் 15 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம், நான் அப்பல்லோ மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சையில் இருந்ததால் உடனடியாக கொடுக்க முடியவில்லை. விபத்து நடந்த உடன் நான் நிலக்கரி நிறுவன மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டேன் என்றால் ஆமாம். அங்கு முதல் உதவிசெய்து, அப்பலோ மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். எனக்கு விபத்து பதிவேடு, காயச்சான்று நிலக்கரி மருத்துவமனை வழங்கியுள்ளது என்றால் ஆமாம். நிலக்கரி நிறுவன மருத்துவமனை மருத்துவர் என்னை முழுமையாக சோதனை செய்து நுண்கதிர் படம் எடுத்து எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்பக்காயம் என்று சான்று வழங்கியுள்ளார் என்றால் நான் மருத்துவரிடம் கேட்டேன் எனக்கு ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார், ஆனால் என்னால் நடப்பதற்கு சிரமம் உள்ளது. நான் அப்பலோ மருத்துவமனையில் 18.05.2017 முதல் 20.05.2017 வரை 3 நாட்கள் மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் ஆமாம். அங்கு எனக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையில் எனக்கு எலும்பு முறிவுஇருப்பதாகவோ ஏற்பட்ட காயம் பெருங்காயம் என்று சான்று அளிக்கவில்லை என்றால் ஆமாம். நான் மேற்படி விபத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து தகுதி சான்று கொடுத்து பணியில் சேர்ந்தேன் என்றால் 15 நாட்கள் கழித்து. அப்பலோ மருத்துவமனை செலவுகளை நிலக்கரி நிறுவனம் ஏற்றுக்கொண்டது என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணை சொல்லியுள்ள செலவினங்களுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்பக்காயம் என்றும், நிரந்தர ஊனம் ஏதும் இல்லை என்றும், வருவாய் இழப்பு ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.